openDemocracy
free thinking for the world

ஓபன் டெமாக்கரசியில் வெளியிடப்பட்டது (http://www.opendemocracy.net)

## குடிமைச் சமூகத்தின் எதிர்ப்பின் மூன்று பண்புகள்: ஒற்றுமை, திட்டமிடுதல், ஒழுங்கு கட்டுப்பாடு

ஹார்டி மெரிமான் 2010, நவம்பர் 19

உலகம் முழுவதும் உள்ள அகிம்சை இயக்கங்களின் வெற்றிக்கும் தோல்விக்கும் இடையே இந்த மூன்று பண்புக் கூறுகள் வேறுபாட்டை உருவாக்க முடியும்: ஒற்றுமை, திட்டமிடுதல் மற்றும் அகிம்சை ஒழுங்குக் கட்டுப்பாடு.

## ஆசிரியர் குறிப்பு

2005 முதல் 2007 வரை ஹார்டி மெரிமான் ஐ.சி.என்.சி.யின் திட்டங்கள் மற்றும் ஆராய்ச்சி இயக்குனராக செயல்பட்டார். இவர் ஜீன் ஷார்ப் எழுதிய 'வேக்கிங் நான்வயலன்ட் ஸ்ட்ரகிள்: ட்வெண்டியத் செஞ்சுரி பிராக்டீஸ் மற்றும் ட்வெண்டி ஃபர்ஸ்ட் செஞ்சுரி பொடன்ஷியல்' என்ற நூலை எடிட் செய்தவர். மேலும் 'ஏ கைட் டு எஃபக்டிவ் நான்வயலன்ஸ் ஸ்ட்ரகிள்' என்ற நூலின் இணை ஆசிரியர்.

## வன்முறையற்ற குடிமை எதிர்ப்பு இயக்கங்கள் ஏன் ஆற்றல் வாய்ந்தவையாக உள்ளன?

அரசியலில் 'அதிகாரம் எப்போதுமே தரப்படுவதில்லை, எப்போதுமே எடுத்துக்கொள்ளப்படுவது' என்ற வெளிப்படையான உண்மையை ஏற்றுக்கொண்டால், வரலாற்றில் உள்ள அகிம்சை இயக்கங்கள் தங்கள் எதிரிகளைவிடச் செல்வாக்குப் பெற்றிருந்ததே அவற்றின் வெற்றிக்குக் காரணம் என்பதே இதன் பதிலாக இருக்க முடியும்.

இந்த முடிவு, எப்படியும் பொருள் வளங்களைக் கட்டுப்படுத்தும் ஆற்றல் மற்றும் வன்முறைக்கான திறனைப் பெற்றவுடன் இறுதியில் அதிகாரம் உருவாகிவிடும் என்ற பரவலாக இதற்கு முரண்பட்டான கருத்தும் அதை ஒட்டிய நேரடி கேள்விகள் எழுப்பவும் வழிகோலுகிறது: இந்தக் கணிப்பு

முற்றிலும் சரியாக இருந்திருந்தால், அகிம்சை இயக்கங்கள், சிறந்த ஆயுதங்கள், நல்ல வளங்களைக் கொண்ட எதிரிகளிடம் தோற்கின்றன. ஆனால், ஒரு நூற்றாண்டுக்கும் மேலாக பல வெற்றிகரமான அகிம்சைப் போராட்டங்கள் நடைபெற்றுள்ளன என்பதை வரலாறு வெளிப்படுத்துகிறது. இவற்றில் சில எடுத்துக்காட்டுகள் பின்வருமாறு:

- 1930கள் மற்றும் 1940களில் இந்தியர்கள் மிகப் பெரிய அளவில் ஒத்துழையாமை இயக்கங்களை (பொருளாதாரப் புறக்கணிப்பு, பள்ளிப் புறக்கணிப்பு, வேலைநிறுத்தங்கள், வரி கொடா இயக்கம், ஒத்துழையாமை இயக்கம், ராஜினாமா செய்தல்) நடத்தினர். இந்தியாவை  நிர்வகிக்க முடியாது என்ற பிரிட்டிஷாருக்கு இவை அச்சுறுத்தலை உண்டாக்கின. இறுதியில் பிரிட்டாஷார் வெளியேறும்படி செய்தன. இந்தியா சுதந்திரம் பெற்றது.
- 1950கள் மற்றும் 1960களில், அமெரிக்கக் குடியுரிமைகள் இயக்கம், மான்ட்போமரி பஸ் புறக்கணிப்புகள் நாஷ்வில்லி லன்ச்-கவுன்டர் உள்ளிருப்புப் போராட்டங்கள் போன்ற அகிம்சைப் பிரச்சாரங்கள், நிறுவனமயமாக்கப்பட்ட பிரிவினை அமைப்பு மற்றும் நாடு முழுவதும் ஏராளமான ஆதரவாளர்களின் பலவீனங்களைப் பயன்படுத்தி சம உரிமைகளைப் பெற்றது;
- 1965-1970, ஐக்கிய பண்ணைத் தொழிலாளர்கள் சங்கம் மிகச் சிறிய, ஏறக்குறைய நிதி ஆதாரமற்ற உள்ளூர் அமைப்பிலிருந்து கலி ்போர்னியா திராட்சைத் தோட்ட அமைப்புகளுக்கு எதிராக வெற்றிகரமாக வேலைநிறுத்தங்கள் மற்றும் புறக்கணிப்புகள் மூலம் நாடு முழுவதும் அறிந்த பெரிய அமைப்பாக மாறியது;
- பிலிப்பைன்சில் 1986இல் ராணுவத்திலிருந்து விலகி வந்தவர்களோடு இணைந்து, அமெரிக்க ஆதரவுடன் நடைபெற்ற ்பெர்டினான்ட் மார்கோசின் சர்வாதிகார ஆட்சியை எதிர்த்து லட்சக்கணக்கான மக்களுடன் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். இவ்வாறு அதிகரித்துவரும் அகிம்சை எழுச்சியைக் கண்டு தாக்குப்பிடிக்க முடியாது என்பதை உணர்ந்து மார்க்கோஸ் நாட்டைவிட்டு வெளியேறினார்;
- 1988இல், சிலி நாட்டு மக்கள், ஆகஸ்டோ பினோசேயின் கொடூரமான சர்வாதிகார ஆட்சி தங்களிடம் விதைத்த பயத்தை வென்று அவரை எதிர்த்து பிரச்சாரம் மற்றும் ஆர்ப்பாட்டங்களிலும் ஈடுபட்டனர்.  இந்த நடவடிக்கைகள்

பினோசேவின் ஆதரவை வலிமையற்றதாக்கி, இவரது சொந்த ராணுவ நிர்வாகக் குழு உறுப்பினர்களே விசுவாசமில்லாமல் செயல்பட்டனர். இந்த நெருக்கடிகளின் உச்சத்தில் இவர் அதிகாரத்திலிருந்து வலுக்கட்டாயமாக இறக்கப்பட்டார்.;

- 1980-1989 ஆண்டுகளில், போலந்து நாட்டினர் ஒருமைப்பாட்டு இயக்கத்தின் ஒரு அங்கமாக சுயாதீன தொழிற்சங்கத்தை உருவாக்கி தங்கள் நாட்டை சோவியத் ஆட்சியிலிருந்து திரும்பப் பெற்றனர்;
- 1989இல், செக்கோஸ்லோவாக்கியாவில் வெல்வெட் புரட்சி என்று அழைக்கப்பட்ட ஆர்ப்பாட்டங்கள் மற்றும் வேலை நிறுத்தங்கள் கம்யூனிசத்திலிருந்து அமைதியான மாற்றத்திற்கு வழிவகுத்தன. இதே போன்ற செயல்பாடுகள் 1991இல் கிழக்கு ஜெர்மனி, லாத்வியா, லித்துவேனியா, எஸ்டோனியா உள்ளிட்ட நாடுகளில் அமைதியான மாற்றங்களுக்கு வழிவகுத்தன;
- 1980களில் தொடங்கிய வேலைநிறுத்தங்கள், புறக்கணிப்புகள் மற்றும் சிவில் ஒத்துழையாமை இயக்கங்கள் மற்றும் வெளிப்புறத் தடை விதிப்புகள் 1990களின் தொடக்கத்தில் தென் ஆப்பிரிக்காவில் இனவெறியை முடிவுக்குக் கொண்டுவந்ததில் பெரும் பங்கு வகித்தன;
- அடுத்த பத்தாண்டுகளில், மோசடி தேர்தல் முடிவுகளைத் தடுத்து, அல்லது எதிர்த்துப் போராடுவதன் மூலம் செர்பியர்கள் (2000), ஜோர்ஜியஸ் (2003) மற்றும் உக்ரேனியர்கள் (2004) எதேச்சாதிகார ஆட்சியை முடிவுக்குக் கொண்டு வந்தனர்;
- 2005இல் லெபனான் நாட்டினர் சிரிய நாட்டுப் படையினரின் ஆக்கிரமிப்பை மிகப் பெரிய அளவிலான அகிம்சைப் போராட்டங்கள் மூலம் முடிவுக்குக் கொண்டு வந்தனர்;
- 2006இல் நேபாள நாட்டினர், மிகப் பெரிய அளவில் ஒத்துழையாமை போராட்டம் நடத்தி சிலிவியன் ஆட்சி திரும்பவும் நிலைநாட்டப்படுவதை கட்டாயப்படுத்தினர்;
- 2007-2009இல் வன்முறைக் கிளர்ச்சிகளுக்கு மத்தியில், ராணுவ ஆட்சியாளருக்கு முன்பாக பாகிஸ்தான் வழக்கறிஞர்கள், சிவில் சமூகக் குழுக்கள் மற்றும் சாதாரணக் குடிமக்கள் சுயாதீன நீதித் துறை மற்றும் அவசர நிலைச் சட்டங்களைத் திரும்பப் பெறவும் வெற்றிகரமாக வலியுறுத்தியது.

## மக்கள் கீழ்படியாவிட்டால், ஆட்சியாளர்களால் ஆட்சி செய்ய முடியாது

சமூகத்தில் உள்ள ஏறக்குறைய அனைத்து நிறுவனங்கள், அமைப்புகள் அனைத்துமே மிகப் பெரிய எண்ணிக்கையிலான சாதாரண மக்களின் தொடர்ச்சியான ஒப்புதல், ஒத்துழைப்பு மற்றும் கீழ்ப்படிதல் ஆகியவற்றைச் சார்ந்தே உள்ளன. அதிகாரம் பற்றிய இந்த அடிப்படை உள்ளுணர்வினால், இவையும் மற்ற குடிமைச் சமூகத்தின் எதிர்ப்பு இயக்கங்களும் வெற்றிபெற்றன. மக்கள் தங்கள் ஒப்புதலையும் ஒத்துழைப்பையும் ஒழுங்கமைக்கப்பட்ட, வியூக அடிப்படையிலான முறையில் திரும்பப் பெற எண்ணிவிட்டால், வலுக்கட்டாயமாக அதிகாரம் செலுத்தும் அமைப்பை எதிர்த்து அவர்களால் சமாளிக்க முடியும். மக்கள் கீழ்ப்படியாவிட்டால், ஜனாதிபதிகள், மேயர்கள், தலைமை நிர்வாக அதிகாரிகள், ஜெனரல்கள் மற்றும் பிற பதவிகளில் இருப்பவர்கள் கட்டுப்படுத்த முடியாத அதிகாரத்துடன் ஆட்சி செய்ய முடியாது.

வேலைநிறுத்தங்கள், புறக்கணிப்புகள், மாபெரும் ஆர்ப்பாட்டங்கள், குடிமை சமூகத்தின்ச் எதிர்ப்பு, இணை - அமைப்புகளை நிறுவுதல், மேலும் நூற்றுக்கணக்கான மற்ற ஆக்கபூர்வமான செயல்கள் ஆகியவை இதைச் செய்யப் பயன்படுத்தப்படும் சாதனங்களாக இருந்தன. இவை தார்மீகக் காரணங்களுக்கப் பயன்படுத்தப்பட வேண்டும் என்ற அவசியம் இல்லை, மாறாக நடைமுறைக்கு ஏற்ற விஷயங்களுக்கும் பயன்படுத்தப்பட்டன. குடிமைச் சமூகத்தின் எதிர்ப்பு வழிமுறையைப் பயன்படுத்திய சிலர் இதே மாதிரியான வியூகங்கள் மற்ற நாடுகளில், தங்கள் சொந்த வரலாற்றில் பலனளித்ததைப் பார்த்துள்ளனர், மேலும் இந்த வகையான எதிர்ப்புகளைத் தங்களுக்குக் கிடைத்துள்ள, வெற்றி வாய்ப்பைப் பெறக்கூடிய சிறந்த சாதனங்களாகக் கருதினார்கள்.

## திறன்களும் நிலைமைகளும்

வரலாற்றிலும், தற்போதைய உலகிலும் இந்த எழுச்சியூட்டும் அகிம்சை இயக்க வெற்றிகளுக்கு நடுவே தோற்றுப்போன அல்லது தீர்மானமற்ற இயக்கங்களைப் பற்றிய உதாரணங்களையும் காண முடிகிறது. உலகம் போலந்து மற்றும் செக்கோஸ்லோவாக்கியாவின் அகிம்சைப் புரட்சிகளைக் கண்ட அதே ஆண்டில் தியானன்மென் சதுக்கப் படுகொலையையும் கண்டது. கடந்த பத்தாண்டுகளில், மிகப் பெரிய எண்ணிக்கையிலான மக்கள் பர்மா, ஜிம்பாப்வே, எகிப்து மற்றும் ஈரானில் அகிம்சை உத்திகளைப்

பயன்படுத்தினார்கள்.  ஆனால் இயக்கத்தின் இலக்குகள் இதுவரையில் எட்டப்படவில்லை. கிழக்கு திமோரில் வெற்றிகரமான  சுய உறுதிப் போராட்டம், குடிமைச் சமூகத்தின் எதிர்ப்பு தவிர்க்க முடியாதது. ஆனால், இது வேறு இடங்களில்  ஆக்கிரமிப்பாளர்களுக்கு எதிராகப் பொதுமக்கள் சார்ந்த இயக்கங்களுக்கு  உந்துதல் அளித்து உதவி செய்த அதே சமயத்தில், பாலஸ்தீனத்தில், மேற்கு பப்புவா, மேற்கு சஹாரா மற்றும் திபெத் ஆகிய நாடுகளில் போராட்டங்கள் தீர்வுகாணப்படாமலே உள்ளன.

**இவற்றுக்கும் மற்றவற்றுக்கும் இடையேயான முரண்பாடுகளுக்குக் காரணம் என்ன?**

இவற்றையும் மற்ற இயக்கங்களையும் வெற்றி அல்லது தோல்வி பெற வைத்த காரணிகளோடு பகுத்து அறியும் மற்றும் அறிவார்ந்த நபர்களால் உடன்பட முடியாது. ஒவ்வொரு சூழலும் மிகவும் சிக்கலானவை என்பதோடு நேரடி காரண காரியங்கங்களோடு அவற்றைத் தொடர்புபடுத்துவதும் கடினம். அறிஞர்கள், பத்திரிகையாளர்கள் மற்றும் பிறரிடமிருந்து இவற்றின் மற்றும் பிற முக்கியமான அகிம்சை இயக்கங்களின் பாதைகளும் விளைவுகளும் அவற்றின் கட்டமைப்பு, நிலைமைகள் மற்றும் அந்த ஒவ்வொரு இயக்கமும் செயல்படும் விதிவிலக்கான சூழ்நிலைகள் குறித்த வாதங்களையே நான் பெரும்பாலும் கேட்கிறேன்.

உதாரணமாக, அகிம்மை இயக்கங்கள் அபாயகரமான ஆற்றலைப் பயன்படுத்த விருப்பமில்லாத ஒரு அடக்குமுறையாளர் உள்ள சமூகங்களில் மட்டுமே செயல் திறன் கொண்டவையாக இருக்கும்.  குறிப்பிட்ட பொருளாதார அளவுகோல் (பொருளாதார சித்தாந்தம், வருமான அளவுகள், வசதி வாய்ப்புகள் விநியோகம், நடுத்தர வர்க்கத்தினரின் இருப்பு) மற்றும் கல்வி அளவுகள்தாம் வெற்றிகரமான இயக்கங்களுக்கு முக்கியம் என்று சிலர் கூறலாம். இயக்கங்களின் விளைவுகளைத் தீர்மானிப்பதில் மேலோங்கியிருக்கும் வல்லரசுகள் மற்றும் பிராந்திய மேலாதிக்கங்களின் பங்கு முக்கியத்துவம் பெறும் என்று மேலும் சிலர் கூறுகின்றனர்.  ஒரு நபர் எடுத்துரைக்கும் கூடுதல் கட்டமைப்புகள் மற்றும் சூழ்நிலைகள், அதாவது, இன வேறுபாடு, அரசியல் மற்றும் கலாசார வரலாறு, மக்கள்தொகை அளவு, நிலப்பகுதி ஆகியவை எண்ணற்றவை, மேலும் இவற்றில் பல நிலைமைகள் ஒரு குறிப்பிட்ட இயக்கத்தின் போக்கில் பாதிப்பை ஏற்படுத்தக்கூடும்.

அமைப்பு மற்றும் சூழலின் நிலவரம் சார்ந்த காரணிகளே இயக்கத்தின் வெற்றியைத் தீர்மானிக்கின்றன என்னும் பார்வைக்கு மாற்றுக் கருத்து உள்ளது. முரண்பாடுகளைக் கையாள்வதில் ஒரு இயக்கத்தின் திறன்கள் இதில் முக்கியமானவை. இதைத்தான் கல்வியாளர்கள் முகமை எனக் குறிப்பிடுகிறார்கள். மாறத்தக்க காரணிகளின் மீது ஒரு இயக்கம் கொண்டிருக்கும் கட்டுப்பாடுதான் அதன் திறன்கள் அல்லது முகமை எனப்படுகிறது. ஒரு இயக்கம் எந்த வியூகச் செயல்பாட்டைத் தேர்ந்தெடுக்கிறது; மக்களை ஒன்று திரட்டவும் அவர்களைத் தொடர்ந்து ஈடுபடுத்தவும் எந்த மொழியைப் பயன்படுத்துகிறது; எவ்வாறு கூட்டமைவுகளை உருவாக்குகிறது; தனது எதிராளிகளை எவ்வாறு குறிவைக்கிறது; குடிமைச் சமூகத்தின் எதிர்ப்பு சார்ந்த பல்வேறு அம்சங்களில் இது எவ்வாறு முடிவுகளை எடுக்கிறது என்பவற்றைப் பொறுத்தே இந்தத் திறன்கள் மதிப்பிடப்படுகின்றன.

என் கண்ணோட்டத்தில், அகிம்சை இயக்கங்களைப் பகுப்பாய்வு செய்பவர்களால் இந்தத் திறன் அடிப்படையிலான காரணிகள் பொதுவாகவே குறிப்பிடத்தக்க அளவில் குறைவாக வலியுறுத்தப்படுகிறது அல்லது கவனிக்காமல் விடப்படுகிறது. இது ஏன் இப்படி என்பது இந்தக் கட்டுரைக்கு அப்பாற்பட்ட விஷயம். ஆனால் மக்கள் இதில் சந்தேகம் கொள்கிறார்கள் அல்லது இந்த அகிம்சை நடவடிக்கையின் அடிப்படைக் காரணம் அவர்களுக்குத் தெரியாது. கூட்டு நடத்தையின் மாற்றங்கள் மூலம், ஆழமாக வேரூன்றியிருக்கும், அடக்குமுறை எதிராளிகளிடமிருந்து மக்கள் இயக்கங்களுக்கு அதிகாரம் மறு ஒதுக்கீடு செய்யப்படலாம். அதற்கு மாறாக, இது நிகழ்ந்த சந்தர்ப்பங்களில் இதை சாத்தியமாகச் செய்த மாறக்கூடிய வெளிப்புறக் காரணிகள் அல்லது அசாதாரண சூழ்நிலைகள் உருவாகியிருக்கலாம் என்று அவர்கள் அனுமானம் செய்துகொள்கின்றனர்.

ஆனால், நாம் முகமை மற்றும் திறன்களின் முக்கியத்துவத்தைக் குறைத்து மதிப்பிடாமல் அகிம்சை இயக்கங்களின்  பாதைகள் மற்றும் விளைவுகளின் மீது செல்வாக்கு செலுத்தும் கட்டமைப்புகள் மற்றும் நிலைகளின் பங்களிப்பை மதிக்கலாம். உண்மையில் முகமை மற்றும் திறன்கள் வித்தியாசத்தை ஏற்படுத்துகின்றன, சில சந்தர்ப்பங்களில் இயக்கங்களை இவை மோசமான நிலைகளைக் கடந்து வர, கையாள அல்லது மாற்ற உதவியுள்ளன.

திறன்கள் மற்றும் முகமையின் முக்கியத்துவத்துவத்தை உணர்வது என்பது, வியாபாரம் அல்லது ராணுவச் சிந்தனைகள் போன்ற பிற துறைகளில் பொது அறிவாகக் கருதப்படுகிறது. அகிம்சைப் போராட்டத்தின் விஷயத்தில் மட்டும் இது ஏன் வேறு மாதிரி இருக்க வேண்டும்? ஒரு ராணுவத் தளபதி அல்லது தலைமை நிர்வாக அதிகாரியிடம் அவர்களது முயற்சிகளின் விளைவுகளுக்கு வியுகங்கள் குறைந்த அளவே முக்கியத்துவம் பெற்றுள்ளன என்று கூறினால் அவர்கள் சிரிப்பார்கள். போட்டிகள் மற்றும் சர்ச்சைக்குரிய எதிர்வினைகள் விளைவுகள் எப்போதுமே பொருள் சார்ந்த நிலவரங்களால் முன்னரே தீர்மானிக்கப்பட்டவை என்றால். சன் த்ஸுவின் மகத்தான படைப்பான *தி ஆர்ட் ஆஃப் வார் என்னும் நூல்* இந்த அளவுக்குப் பிரபலமாகியிராது.

அகிம்சை இயக்கங்களைச் செயல்திறன் மிக்கவையாக ஆக்கும் காரணிகள் என்ன என்ற இந்தக் கட்டுரையின் ஆரம்பக் கேள்விக்குத் திரும்புவோம். இதற்கான பதிலை வரலாற்று இயக்கங்களிலிருந்து சேகரிக்கப்பட்ட வியூகத் தேர்வுகள் மற்றும் சிறந்த நடைமுறைகளைப் பார்ப்பதிலிருந்து தொடங்கலாம். பல்வேறு முகமை - அடிப்படையிலான காரணிகளும் திறன்களும் ஒரு இயக்கத்தின் விளைவுகளில் தாக்கம் ஏற்படுத்தலாம். இவற்றை நாம் ஒரு சில அத்தியாவசியமான அம்சங்களாகச் சுருக்கினால், வெற்றிகரமான அகிம்சை இயக்கத்திற்கான மூன்று பண்புக் கூறுகள் மேலெழுகின்றன. ஒற்றுமை, திட்டமிடல், அகிம்சை ஒழுங்குக் கட்டுப்பாடு ஆகியவையே அவை.

## ஒற்றுமை, திட்டமிடுதல் மற்றும் ஒழுங்குக் கட்டுப்பாடு

முதல் பார்வையில் இந்தப் பண்புகளின் முக்கியத்துவம் வெளிப்படையாகத் தெரிவதாகத் தோன்றலாம். ஆனால் ஒருவர் மக்கள் இயக்கங்களை உத்திபூர்வமான மற்றும் சுருக்கப்பட்ட நிலையில் காணும்போது இந்தப் பண்புகளின் ஆழம் மற்றும் அவற்றின் பரவலான தாக்கங்கள் சில நேரங்களில் தவறவிடப்படும். இவை ஒவ்வொன்றுமே விரிவாக விளக்கப்பட வேண்டியவை.

அகிம்சை இயக்கங்கள் தங்கள் பலத்தை சமூகத்தின் பல்வேறு பிரிவைச் சேர்ந்த மக்களிடமிருந்தே பெறுவதால் *ஒற்றுமை* முக்கியம். சுருக்கமாக, எண்ணிக்கைதான் முக்கியம். ஒரு இயக்கத்திற்கு எவ்வளவு அதிக எண்ணிக்கையில் ஆதரவாளர்கள் உள்ளனரோ அந்த அளவு இது சட்டபூர்வமான, ஆற்றல் மிக்க மற்றும் உத்தி அடிப்படையில் திறன் மிக்கதாக

இருக்கும். எனவே, வெற்றிகரமான இயக்கங்கள் தொடர்ந்து தங்கள் சமூகங்களிலிருந்து ஆண்கள், பெண்கள்; இளைஞர்கள், பெரியவர்கள், முதியவர்கள், நகர்ப்புற மக்கள், கிராமப்புற மக்கள், சிறுபான்மையினர், மத அமைப்புகளைச் சார்ந்த உறுப்பினர்கள், விவசாயிகள், தொழிலாளர்கள், வியாபாரிகள், தொழில் முறை வல்லுனர்கள், செல்வந்தர்கள், நடுத்தர வர்க்கத்தினர், கீழ் மட்டப் பொருளாதார அடுக்கில் உள்ளவர்கள், காவலர்கள், சிப்பாய்கள், நீதித்துறை அங்கத்தினர் மற்றும் பிற குழுக்களைச் சேர்ந்தவர்கள் அடங்கிய புதிய குழுக்களைச் சென்றடையும் முயற்சிகளைத் தொடர்ந்து மேற்கொள்கின்றன.

வெற்றிகரமான இயக்கங்கள் தொடர்ந்து தங்கள் எதிரணியில் உள்ளவர்களின் ஆதரவாளர்களையும் தம் பக்கம் இழுக்கும் முயற்சியில் ஈடுபடுகின்றன. எதிரணியில் உள்ளவர்களைத் தம் பக்கம் இழுப்பது வெற்றிகரமான குடிமை இயக்கங்களின் வலிமைகளில் ஒன்று. உதாரணமாக, இன வெறிக்கு எதிரான தென் ஆப்பிரிக்க இயக்கத்தின் குடிமைச் சமூகத்தின் போராட்டம் பரவலான ஆதரவைப் பெற்றுள்ளதோடு மாற்றம் ஏற்படுத்துவது என்னும் நோக்கத்துக்கான ஒற்றுமையை மக்களிடையே உருவாகியுள்ளது. அது மட்டுமல்ல. இதற்கு முன் இனவெறி அரசை ஆதரித்துவந்த சில வெள்ளையர்ளின் ஆதரவும்கூட இதற்குக் கிடைத்துள்ளது.

அகிம்சை இயக்கங்களில் கலந்துகொள்பவர்கள், தங்கள் இயக்கம் மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள் குறித்த சிக்கலான முடிவுகளையும் எடுக்க வேண்டி இருக்கும். இதைச் செய்ய வியூக அடிப்படையிலான திட்டமிடல் மிகவும் முக்கியமானது. ஒருவர் ஈடுபடும் காரணத்திற்கான தகுதி அல்லது ஒருவரின் எதிராளியின் தார்மீக ரீதியாக ஏற்கமுடியாத செயல்பாடுகளை பொருட்படுத்தாமல் ஒடுக்குமுறையை இயல்பான எதிர்ப்புச் செயல்பாடுகளால் மட்டுமே - அவை நன்றாக செயல்படுத்தப்பட்டாலும்கூட - வெல்ல முடியாது. அதற்கு பதிலாக, இயக்கங்கள், குடிமை சமூகத்தின் எதிர்ப்பு முறையாகத் திட்டமிட்டு, நோக்கங்கள் மற்றும் கவனம் செலுத்தப்படும் இலக்குகளை எட்டுவதற்காக அவற்றை சமூகத்தில் உள்ள மக்களை எப்படி ஏற்கச்செய்வது என்பதைத் திட்டமிடும்போதுதான் இது வெற்றிபெறுகிறது. எந்தகைய உத்திகள் பயன்படுத்தப்பட வேண்டும், அவை எவ்வாறு வரிசைப்படுத்தப்பட வேண்டும் என்பனவற்றை முடிவு செய்தல்; எந்த மக்களை பிரதிநிதித்துவப் படுத்துவது இந்த இயக்கத்தின் நோக்கமோ அந்த மக்களின் அபிலாஷைகள்,

மனக்குறைகளின் அடிப்படையில் செயலாற்றத் தூண்டும் விஷயங்களை மேம்படுத்துவது; எந்தத் தனிநபர் மற்றும் குழுக்களை குறிவைக்க வேண்டும், எந்த குறுகிய, நடுத்தர, நீண்ட கால குறிக்கோள்களைத் தொடர வேண்டும் எனத் திட்டமிடுதல் ஆகியவை முக்கியம். இவற்றோடு, தகவல் தொடர்பு அமைப்பும் உருவாக்கப்பட வேண்டும் அப்போதுதான் கூட்டணிகளில் உருவாக்கப்படவும் அகிம்சை இயக்கங்கள் தொடர்பான சில பிரச்சினைகளுக்கு ஆக்கபூர்வமாக வியூகம் வகுக்க முடியும். இவ்வாறு செய்வதற்கு அகிம்சைப் போராட்டம் எங்கு நடைபெறுகிறதோ அங்குள்ள சூழ்நிலையை முழுமையான ஆய்வு செய்ய வேண்டும். இவர்களின் திட்டமிடல் செயல்பாட்டின் ஒரு பகுதியாக, திறன் வாய்ந்த இயக்கங்கள் முறையாக அல்லது முறைசாராமல் தகவல்களைத் திரட்டுகின்றன, அடி மட்டத்தில் உள்ள மக்கள் கூறுவதைக் கேட்கிறது, பின்னர் தங்களைத் தாங்களை, தங்கள் எதிரிகளை மற்றும் நடுநிலை வகிக்கும் மூன்றாவது பிரிவினரைத் தொடர்ந்து பகுப்பாய்வு செய்கின்றன.

இறுதியாக, ஒழுங்குமுறையாகச் செயல்படுத்தப்பட்டால் மட்டுமே ஒரு உத்தி திறனுள்ளதாக இருக்கும். ஒரு அகிம்சை இயக்கத்தின் தோல்விக்கான மிகப் பெரிய ஆபத்து என்பது, அதன் சில உறுப்பினர்கள் வன்முறையாளர்களாக மாறுவதுதான். எனவே மக்கள், தூண்டிவிடப்பட்டாலும் அகிம்சைவாதிகளாகவே நீடிக்க வேண்டும் என்ற *அகிம்சை ஒழுங்குமுறை* தொடர்ந்து பங்கேற்பாளர்களின் மனதில் ஆழமாகப் பதியவைக்கப்படுகிறது. இதற்கு நடைமுறைக் காரணங்கள் உள்ளன. இயக்கத்தின் உறுப்பினர்கள் மேற்கொள்ளும் வன்முறைச் சம்பவங்கள் இதன் சட்டபூர்வமான தன்மையை ஒரேயடியாகக் குறைத்து, எதிரணியினர் அடக்கு முறையைப் பயன்படுத்தும் வாய்ப்பை நாமே வழங்குவதாக மாறிவிடும். மேலும், ஒரு இயக்கம் தொடர்ந்து அகிம்சையைப் பின்பற்றிவருகிறது என்றால், பரந்த அளவிலான கூட்டாளிகளை - எதிரிகளை ஆதரிப்பவர்கள் உட்பட - கவர்ந்து இழுக்கும் மிகப் பெரிய வாய்ப்பு உள்ளது.

இந்தப் பண்புகளை முழுமையாக ஆராய்வதற்கு ஒரு புத்தகமே எழுத வேண்டி வரலாம், மேலும் அகிம்சை தொடர்ந்து மேலும் அதிகமாக முறையான ஆய்வுகளுக்கு உட்படுத்தப்பட்டு வருகிறது. புதிது புதிதாக எழும் ஒவ்வொரு இயக்கமும் இந் நிகழ்வின் ஒட்டுமொத்தப் புரிதலுக்கான அறிவை வழங்குகின்றன. இந்த அரசியலின் வடிவம் மற்றும் சமூக செயல்பாடு

குறித்து இன்னமும் வரையறுக்கப்படவும் மேம்படுத்தப்படவும் வேண்டியிருக்கிறது.

ஆனால், ஒற்றுமை, திட்டமிடல் மற்றும் ஒழுங்குமுறை என்ற இந்த மூன்று பண்புகள் காலங்களைக் கடந்தவை, இவை தாமாகவே ஒரு பொதுவான கட்டமைப்பை வழங்குகின்றன, இதன் மூலம் இயக்கத்தின் உறுப்பினர்கள், ஆதரவாளர்கள், இவற்றோடு தொடர்புகொண்டவர்கள், ஆய்வு செய்பவர்கள் ஆகியோர் மிக விரைவாக இதன் நிலையை மதிப்பிட முடிகிறது. இந்த இயக்கம் ஒன்றுபட்டுள்ளதா, இதற்கு ஒரு திட்டம் உள்ளதா, ஒழுங்குக் கட்டுப்பாட்டுடன் உள்ளதா என்பவற்றை அறிய முடியும். அகிம்சைச் செயல்பாடுகளின் கொள்கைகளை வகுப்பவர்களின் செயல்பாடுகள் ஏற்கெனவே அமைதி மற்றும் உலக நீதிக்கான  பாதையை வகுத்திருக்கிறார்கள். இதைத் தொடர்ந்து செய்துவருபவர்களால் நமது வருங்காலம் உருவாக்கப்படும்.

**

இந்தக் கட்டுரைக்காக நான், தங்கள் நோக்கங்களை  சாதித்த இயக்கங்களை "வெற்றிகரமாக" என்றும் சாதிக்காதவற்றை "தோல்வியடைந்த" இயக்கங்கள் என்றும் குறிப்பிட்டுள்ளேன். இந்த விளக்கத்தில் உலகியல் சார்ந்த அம்சமும் உள்ளது. வெற்றிகரமான இயக்கம் தன்னுடைய நோக்கத்தைச் சாதித்திருக்கலாம் (எ.கா. 2004 உக்ரைனில் நடைபெற்ற ஆரஞ்ச் இயக்கம்). ஆனால், இனி வரும் ஆண்டுகளில் எதிர்கொள்ளப்போகும் சவால்களால் இது சரிவை சந்திக்கலாம். இதே சமயத்தில் தனது இலக்கைச் சாதிக்காமல் தோற்கும் இயக்கங்கள் அடுத்து வரும் ஆண்டுகளில் ஆக்கபூர்வமாக தன் இயக்கத்தின் நோக்கத்தைச் சாதிக்கலாம். ஒரு குறிப்பிட்ட இயக்கத்தை வெற்றிகரமானது அல்லது தோல்வியடைந்தது என்று வகைப்படுத்துவதை மாற்றுவது தேவை இல்லை என்றாலும்கூட இந்த அடுத்தடுத்து ஏற்படும் விளைவுகள் மிகவும் ஆற்றல் மிக்கவையாக இருக்கலாம் என்பதால் இவையும் முக்கியமே.